564

# திருக்குறள் - நாமு

விளக்க உரையுடன்

ஐந்தாம் பாகம் (5-ஆம் பாரம்)

அரசினர் பாடதிட்டத்திற்கமைய
வெளியிடப்பட்டுள்ளது.

பதிப்பாளர் :

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

53-56, பவழக்காரத் தெரு :: சென்னை 1. பதிப்புரிமை] 1947

[விலை அணா 5

# திருவள்ளுவர்

---

வள்ளுவர் என்பது ஒரு குலத்தவரைக் குறிக்கும் பெயர். திருக்குறள் என்னும் சிறந்த தமிழ் நூலைச்செய்தவர் திருவள்ளுவர் எனப்படுவர். திரு என்பது சிறப்பு நோக்கி இட்டு வழங்கும் சொல். திருக்குறள் செய்தவரின் பெயர் மறக்கப்பட்டுவிட்டது. அந்நூல் செய்தவர் வள்ளுவர் குலத்தினராதலின் அவர் வள்ளுவர் என அறியப்பட்டு வருகின்றார். அவர பெயர் அறியப்படாதது போலவே அவர் செய்த நூலின் பெயரும் அறியப்படவில்லை. குறள் என்பது நூலுக்குரிய பெயரன்று; இரண்டடியாலாகிய வெண்பாப் பாடலைக் குறிப்பது. அவருடைய பெயரும், அவர் செய்த நூலின் பெயரும் அறியப்படாமல் இருப்பனபோலவே அவருடைய சமயமும் யாது என அறியப்படாமல் இருக்கின்றது தமிழ் இலக்கணத்தில் வரும் உயிர், மெய், வினை, உயிர்மெய் வேற்றுமை போன்ற சொற்களைக்கொண்டு பழந்தமிழ் மக்கள், இறைவன், உயிர், வினை, மறுபிறப்புப் போன்ற தத்துவக் கொள்கைகளை நன்கு ஆராய்ந்து அறிந்திருந்தார்கள் எனத் தெரிகின்றது. இவைகளைப்பற்றிய கருத்துக்கள்

எல்லாச் சமயங்களுக்கும் பொது. உயிர், உலகம், இறைவன், வினை, இறப்பு, பிறப்பு ஆகியவற்றை ஆராய்ந்து கூறும் உண்மை நூல்களாகிய உபநிடதங்களை உலகமறை என மேல்நாட்டறிஞர் கூறுவது இங்கு கருத்திற் கொள்ளத்தக்கது. இவ்வகைக் கொள்கையுடையவரே திருவள்ளுவர் என நாம் துணியலாம்.

திருவள்ளுவர் காலம் 1,800 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இவர் உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டிய அரசன் காலத்தவர் என்னும் ஐதிகமும உள்ளது. உக்கிரப் பெருவழுதியின் காலம் கி. பி. 50 வரையிலாகலாம். திருவள்ளுவர் வாசுகி என்னும பெண்ணை மணந்து இல்லறம் நடத்தியவரென்றும, நெசவு தொழிலையே தனது வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருந்தவரென்றும், மயிலாப்பூரில் வாழ்ந்தவரென்றும் பரம்பரைக் கதைகள் உள்ளன.

ந சி. க.

# திருக்குறள்—நூறு

## - ஐந்தாம் பாகம் -

கடவுள் வழிபடாதார் பிறவிக்கடலைத்

தாண்டமாட்டார்

1. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

(வசன நடை): இறைவன் அடி (சேர்ந்தார்) பிறவி பெருங்கடல் நீந்துவர், சேராதார் நீந்தார்

இறைவன் - கடவுள். அடி - பாதம். நீந்துவர் - கடப்பர்.

கடவுளின் பாதங்களை அடைந்தவர் பிறப்பு என்னும் பெரிய கடலைக் கடப்பர்; அடையாதவர் கடக்க மாட்டார்.

கெடுக்கவும் ஆக்கவும் வல்லது மழை

2 கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

(வ - ந.). கெடுப்பதூஉம் கெட்டார்க்கு சார்வு ஆய் மற்று ஆங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை.

கெடுத்தல் - வறுமை அடைபச செய்தல். சார்வு - துணை. மற்று ஆங்கு - முன் கெடுத்தாற்போலே. எடுப்பது உம - தூக்குதல், செல்வம உயரச செய்தல்

தான் பெய்யாது நின்று உலகத்தாரை வறுமை

அடையச் செய்வதும், அவர்களுக்கு உதவியாய் நின்று மற்படி செல்வம் உயரும்படி செய்வதும் வல்லது மழையே.

ஐம்பொறிகளை அடக்குவான் மோட்சம் அடைவான் 3.
உரன் என்னும் தோட்டியால் ஓரைந்தும் காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து.



[ஐந்தாம்

(வ - ர.): உரன் என்னும தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான் வரன் என்னும் வைப்புக்கு ஓர் வித்து.

உரன் - மன உறுதி. தோட்டி - அங்குசம். ஓர் ஐந்து - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம் பொறிகள். வரன் - மேலானது வைப்பு - உலகம். வித்து - விதை.

மன உறுதி என்னும் அங்குசத்தால் ஐம்பொறிகளை யும் அடக்கி ஆள்கின்றவன் மோட்சத்தை அடைய ஏற்ற வனுவான்.

## துறவிகள் சொல் பலிக்கும்

**4. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**

**மறைமொழி காட்டி விடும்.**

(வ - ந): நிறைமொழி மறைமொழி காட்டிவிடும. மாந்தர் பெருமை நிலத்து

நிறைமொழி-பொருள் நிரம்பிய சொற்கள். மாந்தர்-மக்கள். மறைமொழி - மந்திரங்கள், சொன்னபடி பலிக்கும் சொற்கள். காட்டிவிடும் - தெரியச் செய்துவிடும்.

பொருள் நிறைந்த வார்த்தைகளைச் சொல்லும் துறவிகளின் பெருமையை, அவர்களின் மந்திரங்களாகிய சொற்களே (கண்ணெதிரில்) காட்டிவிடும.

**மனம் களங்கமற்றிருப்பதே எல்லா அறங்களுமாகும்**

**5. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**

**ஆகுல நீர பிற.**

(வ - ந.): மனததுக்கண் மாசு இலன் அனைத்து அறன்; பிற ஆகுல நீர.

ஆதல்;

மாசு - களங்கம். அனைத்து - எல்லா.
ஆரவாரம். நீர - தன்மையுடையன.
ஆகுலம் -

மனத்தில் களங்கமற்றவனுகுக; அதுவே
எல்லா அறமும்ம; மற்றவை ஆரவாரத்
தன்மையுடையன. **பாகம்**]
திருக்குறள்—நாறு 3

நானைக்கு என்றிராது உடனே தருமஞ் செய்க

**6. அன்றறிவாம என்னு(து) அறஞ்செய்க மற்றது**
**பொன்றுங்கால் பொனருந் துணை.**

(வ - ந): அன்று அறிவாம் என்னுது அறம்
செய்க; அது பொன்றும்கால் பொன்ற துணை

அன்று - பின்பு. அறிவாம -
பார்த்துககொள்ளலாம். பொன்றுதல் - சாதல்.

பின்பு பார்த்துக்கொள்ளலாம என்று
சொல்லி

விடாது தருமத்தைச் செய்க. அவ்வாறு
செய்யப்பட்ட தருமம் சாகும்போது

அழிவில்லாது துணையாகக் கூட வருமே

ஒயாது தருமஞ் செய்பவன் பிறப்பை ஒழிப்பான்

**7** வீழ்நாள் படாஅமை நன்றாற்றின்
அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

(வ - ந.): வீழ்நாளை படாஅமை ஒருவன் நன்று ஆற்றின் அஃது வாழ்நாள் வழி அடைக்கும் கல்.

வீழ்நாள் - தருமஞ செய்யாத நாள், வீண நாள். படுதல் - உளவாதல் ஆற்றின் - செய்யின். வாழ்நாள வழி - பிறப்பு அடையும் வழி.

தருமஞ்செய்யாத நாட்கள் இலலாமல் என்றும் ஒருவன் தருமத்தைச செய்வானாயின் அது அவன் பிறப்பு அடையும் வழியை அடைகாகும் கல்லாகும். அவன் பிறவா நெறியாகிய இன்பத்தை அடைவான்.

அன்போடுகூடியதே நிறைந்த இல்வாழ்வு **8.**

அன்பும அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

(வ - ந.): இல்வாழ்க்கை அன்பும அறனும் உடைத்து ஆயின் அது பண்பும் பயனும்.

அன்பு - நேசம். அறன் - பிறர்க்குக் கொடுத்துண்டலாகிய தருமம். பண்பு - குணம். பயன் - பேறு.

குடும்ப வாழ்க்கையில் கணவன் மனைவியருக்கிடையில் நேசமும், தருமமும் இருந்தால் அது பூரண வாழ்க்கையாகும்.

## துறவறத்தினும் இல்லறமே சிறந்தது

**9. அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை; அஃதும் பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.**

(வ - ந.): அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை; அஃதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று.

இல்லறம் துறவறம் என்னும் இரண்டினுள் அறமென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையேயாகும், அதுவும் பிறரால் பழிக்கப்படத்தக்க இல்லாத விடத்துச் சிறப்பாகும்.

தீமைகள்

மனைவியிடம் நற்குணமின்றேல் இல்வாழ்க்கை பாழ்

10 மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின்
வாழ்க்கை

எனைமாட்சித்(து) ஆயினும் இல்.

(வ - ஈ.): மனைமாட்சி இல்லாள்கண் இல் ஆயின் வாழ்க்கை எனை மாட்சித்து ஆயினும் இல்.

மனைமாட்சி - இல்வாழ்க்கைக்கேற்ற சிறப்பு. இல்லாள் - மனைவி எனை - எவ்வளவு.

இல்வாழ்க்கைக்கேற்ற சிறந்த
யிடம் இல்லையாயின் அவ்வாழ்க்கை

குணங்கள் மனைவி
செல்வத்தால் எவ்
வளவு சிறப்புபெற்றதாயினும
மேம்பட்டதாகாது.

கற்போடு கணவனைப் பேணுபவளே சிறந்த மனைவி

11. தற்காத்துத் தற்கொண்டான் பேணித்
தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

(வ - ஈ.): தன் காத்து தன் கொண்டான் பேணி தகைசான்ற சொல் காத்து சோர்வு இலாள்

தன்காதது - தன்னைக் காத்து பேணி - உபசரித்து. தகை - பெருமை. சான்ற - நிறைந்த சொல் - புகழ். சோர்வு - மறதி.

தனது கற்பு முதலிய நற்குணங்களைக் காப்பதிலும், கணவனை உபசரிப்பதிலும, புகழுக்குரிய நன்மைகளைச் செயவதிலும மறதியின்றி ஊக்கமுள்ளவளே சிறந்த பெண்ணுவாள்.

**அன்பிலாதவனை அறக்கடவுள் தண்டிக்கும் 12**
**என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பிலதனை அறம்.**

(வ - ந.) என்பு இலதனை வெயில்போல அன்பு இல தனை. அறம் காயும

என்பு - எலுமபு

எலுமபில்லாத புழுகளை வெய்யில் சுடுவதுபோல அன்பில்லாத உயிரை அறக்கடவுள் வருத்தும்

**அன்பின்றேல் உடலழகு பயனில்லை**

13. புறத்துறுப்பு எல்லாம் எவன்செயயும யாக்கை
அகதுறுப்பு அன்பி லவர்க்கு.

(வ - ந): யாக்கை அகந்து அன்பு இலவர்க்கு புறத்து உறுபபு எல்லாம் எவன் செய்யும்.

யாக்கை - உடமபு. அகத்து - உளளே. புறத்து - வெளி. எவன் - யாது. செய்யும - உதவியைச் செய்யும்.

மனத்தில் அன்பில்லாதவர்க்கு வெளி அவயவங்கள் எல்லாம் யாது பயனைச் செய்யும்?

விருந்தினரை உபசரிப்பான் தேவரால்
விரும்பப்படுவான் 14 செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

(வ - ந.): செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து இருப்பான் வானத்தவர்க்கு நல் விருந்து.



செல் - வந்த விருந்து - விருந்தாக

வந்தவரை. ஓம்பி - உபசரித்து வானத்தவர் - தேவர்.

முன் விருந்தாக வந்தவனை உபசரித்து, இனி வரும் விருந்தினனை எதிர்பார்த்திருப்பவனை தேவர்கள் மிக விரும்புவார்கள்.

**விருந்து ஓம்புவானின் நிலம் நன்றுய் விளையும்**

**15. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ வி**

**நந்தோம்பி**

**மிச்சில் மிசைவான் புலம்.**

(வ - ந): விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம் **வித்தும்** இடல் வேண்டுமோ?

மிசைதல் - உண்ணல். புலம - விளை நிலம். தல் - விதை விதைத்தல்.

**வித்திடு**

வந்த விருந்தினனை முன்னமே உண்ணச்செய்து எஞ்சியிருப்பதை உண்கின்றவனுடைய பயிர் நிலம் விதையாமலே விளையும்.

**இன்சொல்லுடையவரை வறுமை அடையாது 16**

நுன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம இன்சொ(ல்) அவர்க்கு.

(வ - ந.): யார்மாட்டும் இன்புறூஉம் இன்சொல் அவர்க்கு துன்பு உறூஉம துவ்வாமை இல் ஆகும்.

இன்புறூஉம் - இன்பத்தை மிகுவிக்கும்.

துவ்வாமை - வறுமை.

எவரிடத்தும் இன்பத்தை அதிகம கொடுக்கும் இனியசொலல்ல புடையவாகளுக்கு வருத்ததனைத் தரு கின்ற வறுமை வராது

தினையளவு நன்றியும் பனையளவாம் 17.

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.



(வ - ந.): தினைதத்துணை நன்றி செயினும் பனைத் துணை ஆ கொள்வர் பயன் தெரிவார்.

தினைத்துணை - தினை அளவு.

தினையளவு சிறிய உபகாரத்தை ஒருவன் செய்தாலு யினும் அதனை நனறியறிவார் பனை அளவாக நினைப்பர்

ஒரு நன்றியை நினைந்து பல கொடுமைகளை மற

18. கொன்றன்ன இன்னு செயினும அவாசெய்த
ஒன்றுநனறு உள்ளக் கெடும்.

(வ - ந): கொன்று அன்ன இன்னு செயினும் அவர் செய்த நன்று ஒன்று உள்ள கெடும்.

கொன்று அன்ன - கொலை செய்தல் போன்ற. இன்னு - கொடுமை.

நன்மை செய்த ஒருவா கொலைபோன்ற கொடுமை

களைச் செய்தாராயினும், அவர் செய்த ஒரு உபகாரத்தை

நினைந்து தீமைகளை மறக்கவும.

பிறர் பொருளைத் தன் பொருள்போலப் பேணுக 19. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்.

(வ - ந): பிறவும் தமபோல் பேணி செயின் வாணிகம் செய்வார்க்கு வாணிகம்

பிறவும் - பிறர் பொருளையும். தமபோல் - தம் பொருள்போல. பேணிச்செயின் - பாதுகாத்து வாணிகஞ் செய்தல்.

பிறர் பொருளையும் தன் பொருள்போலப் பாது காத்து வாணிகம் செய்கின்றவர்களுக்கு வியாபாரம் வளரும்.

## ஆமைபோல் ஐந்து அடக்கு

**20.** ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆறறிவின் எழுமையும் ஏமாப் புடைத்து.



[ஐந்தாம்

(வ - ர). ஆமைபோல் ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்பு உடைத்து

ஒருமை - ஒரு பிறப்பு ஏமாப்பு - பாதுகாப்பு.

ஆமை தனது உறுப்புக்களை உள்ளே இழுப்பது போல ஒருவன் ஒரு பிறப்பில் ஐம்பொறிகளையும் அடக்க வல்லனையின் அவனை அது எழு பிறப்பிலும் தீமையினின்றும் பாதுகாக்கும்.

## நாவடக்கமே சிறந்தது

**21.** யாகாவா(ர்) ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(வ - ந.): யா காவா ஆயினும் நாகாக்க; காவாக் கால் சொல் இழுக்குபபட்டு சோகாப்பர்.

யா - எவை. நா - நாக்கு. நாகாதல் - நாவினல் தீய சொற்களைச் சொல்லாதிருத்தல். சோகாத்தல் - துன்புறுதல

எவற்றைக் காக்காவிட்டாலும் நாவைக் காத்தல் வேண்டும்; இல்லாவிடின் குற்றமான சொற்களைச் சொல்லித் தாமே துனபம் அடைவர்.

## குலம் ஒழுக்கத்தால் அறியப்படும்

**22** ஒழுக்க முடைமை குடிமை இழுகுடம
இழிந்த பிறப்பாய் விடும்.

(வ - ந.): ஒழுக்கம் உடைமை குடிமை; இழிந்த பிறபபாய் விடும்.

இழுகுடம
குடிமை - நல்ல குலம்.
இழிந்த - தாழ்ந்த.

இழுகுடம் - தவறுதல்.

ஒருவன் உயர்ந்த குலத்திற்
லொழுக்கம் காட்டும்; ஒழுகுகம
தாழ்ந்தகுலத்தினன் ஆக்கிவிடும.

பிறந்தவனுதலை நல்
தவறுதல் அவனைத்



மன உறுதியுடையார் நல்லொழுக்கத்தைக்
கைவிடார் 23. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்
இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

(வ - ற.): உரவோர் ஒழுக்கத்தின் ஒல்கார்; இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து.

உரவோர் - மன உறுதியுடையோர். ஒல்குதல் - சுருங்குதல்; குறைவுபடுதல். ஏதம் - குற்றம். படுபாக்கு - படுதல்; உண்டாகும் வகை.

மன உறுதியுடையோர் நல்லொழுக்கத்தோடே ஒழுகுவர், ஏனெனில் அவர்களுக்கு அதனின்றும் நீங்குவதால் உண்டாகும் தீமை தெரியும்.

## அறிவுடையோர் பிறன் மனையாளை நோக்கார்

**24. பிறன்மனை நோக்காத பேராண்மை**

**சான்றோர்க்கு**

**அறனென்றே ஆன்ற ஒழுக்கு.**

(வ - ந.): பிறன் மனை நோக்காத பேர்ஆண்மை சான்றோர்க்கு அறன் ஒன்றே ஆன்ற ஒழுக்கு.

மனை - மனைவி. நோக்குதல் - பார்த்து ஆசைப்படுதல். பேராண்மை - பெருங்குணம். ஆன்ற - நிறைந்த. ஒழுகு - ஒழுகுகை.

பிறனுடைய மனைவியைப் பாராத பெருங்குணம் அறிவுடையோர்க்கு நீதியும் நிரம்பிய ஒழுக்கமும் ஆகும்.

## அறிவில்லாதவர் செய்த பிழையைப் பொறுத்தல்

**ஆண்மை 25. இன்மையுள் இன்மை விருந்தொரால்;**

**வன்மையுள்**

**வன்மை மடவார்ப் பொறை.**

(வ - ந.): இன்மையுள் இன்மை விருந்து வன்மையுள் வன்மை மடவார் பொறை.

ஓரால்;

இன்மை - வறுமை. ஓரால் - நீக்குதல். பலம். மடவார் - அறிவில்லாதவர்.

*

வன்மை -



[ஐந்தாம்

வறுமைகளில் மிக்க வறுமை விருந்தினரை உபசரியாது விடுதலாகும்; வலிமைகளுள் சிறந்த வலிமை அறிவின்மையால் தீமை செய்தவர்களைப் பொறுத்தல்.

பொறுமை நரகத்துக்கு வழிகாட்டும் 26.

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்

தீயுழி உய்த்து விடும்.

(வ - ந.): அழுக்காறு என ஒரு பாவி திரு செற்று தீஉழி உய்த்து விடும.

அழுக்காறு - பொறுமை பாவி - பாவம் திரு - செல்வம். செற்று - அழித்து. தீஉழி - தீய இடம், நரகம். உய்த்தல் - செலுத்துதல்.

பொறுமை என்னும பாவம ஒருவனது செல்வத்தைக் கெடுத்து அவனை நரகத்துக் கொண்டுபோய் விடும்.

**பொறுமைக்காரனுக்குச் செல்வமும், நல்லவனுக்கு வறுமையும் வாரா**

**27. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப் படும்.**

(வ - ந.): அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும, வியான் கேடும் நினைக்கப்படும.
செவ்

அவ்வியம் - பொறுமை ஆக்கம் - செல்வம். செவ்வியான் - நல்நெறியில் நடப்பவன். கேடு - வறுமை. நினைக்கப்படும - ஆச்சரியத்துக்கு இடமாகும்.

பொறுமையுடையவனிடத்தில் செல்வமும, உள்ளமுடையவனிடத்தில் வறுமையும் நேரின்

நல்ல

அவை

வியக்கத்தக்கன.

## புறங்கூறல் நன்றன்று

28. கண்நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லறக
முன்இன்று பின்நோக்காச் சொல்.



(வ - ந.): கண்நின்று கண் அற சொல்லினும் முன் இன்று பின் நோக்கா சொல் சொல்லற்க.

கண்நின்று - கண் எதிரே நின்று. கண் அற - முகம் முறிய. முன் இன்று - எதிரில் இல்லாதவிடத்து. பின் நோக்காத - பின்வரும் குற்றத்தை நோக்காத.

உன் கண் எதிரே நின்று ஒருவன் உனது முகம் முறியும்படியான சொற்களைச் சொல்வானாயினும், அவனில்லாத விடத்து அவனைப் புறங்கூறாதே.

## வீண் பேச்சுப் பேசுவான் பதர்

29 பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்

மக்கட் பதடி யெனல்.

(வ - ந.): பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல்; மக்கள் பதடி எனல்.

பயனில்சொல் - வீண் சொல்.
பாராட்டுதல் - பல முறையும சொல்லுதல். மகன் எனல் - மனிதன் என்று
சொல்ல வேண்டாம். பதடி - பதர்; உள்ளே இல்லாதது. எனல் - என்று (சொல்லுக)
பருப்பு

வீண் பேச்சைப் பல முறையும் பேசுகின்றவனை மனிதன் என்று சொல்லாதீர்கள்; அவன் மக்களுள் பதா எனப்படுவான்.

## தீயவை தீயினும் கொடியவை

30 தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும அஞ்சப் படும்.

(வ - ந.):
அஞ்சப் படுமம.

தீயவை தீய பயதலால் தீயவை தீயினும்

தீயவை - தீய செயல்கள்.
தல் - தருதல். தீ - நெருப்பு.
தீய - தீமைகள். பயத்

தீய செயல்கள் தீய பலனையே தருதலால், அவை நெருப்பைக் காட்டிலும் அதிகம் பயப்படத்தக்கன..



[ஐந்தாம்

**தன்னை விற்றுயினும் உபகாரஞ் செய்க 31.**

**ஒப்புரவி னல்லருங் கேடெனின் அஃதொருவன்**
**விற்றுக்கோள் தக்க(து) உடைத்து.**

(வ - ந.): ஒப்புரவினால் கேடுவரும் எனின், அஃது ஒருவன் விற்று கோள் தக்கது உடைத்து.

ஒப்புரவு - உபகாரஞ் செய்தல். கேடு - பொருள் அழிவு. கோள் - கொள்ளுதல்; வாங்குதல். தக்கது - தகுதியுடையது.

ஒருவனுக்கு உபகாரஞ் செய்தலால் தனக்குப் பொருள் அழிவு உண்டாகுமாயின், அக்கேட்டை தன்னை அடிமையாக விற்றுயினும் கொள்க.

**கொடை மகிழ்ச்சி தரும்**

32. ஈத்து (உ)வக்கும இன் பம் அறியார்கொல்
தாமுடைமை
வைதழிக்கும வன்க ணவர்.

(வ - க.): தாம உடைமை வைத்து இழக்கும் வன்கணவர் ஈத்து உவக்கும இன்பம் அறியார் கொல்.

உடைமை - பொருள். வைத்து - சேர்த்து வைத்து. வன்கணவர் - கொடியவர். உவத்தல் - மகிழ்தல். கொல் - வியப்பை உணர்த்தும் சொல்.

தமது செல்வத்தைச் சேர்த்து வைத்துப் பின் அதனை இழந்து போகின்ற கொடியவர் கொடுத்தலால் உண்டாகும் மகிழ்ச்சியை அறியார் போலும்? கொடுத்தலின் மகிழ்ச்சியை அறிந்தால் பொருளைச் சேர்த்து இழந்துபோகார்.

வறியார்க்கு ஈயாது உண்ணல் இரத்தலிலும் கொடியது

33. இரத்தலின் இன்னது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

(வ - க.): நிரப்பிய தாமே தமியர் உண்ணல் இரத்தலின் இன்னது.

மன்ற - மற்ற. நிரப்பிய - நிரப்ப வேண்டி. தனித்தவராய். இரத்தல் - பிச்சை எடுத்தல்.

தமியர் -

பொருளைச் சேர்க்க விரும்பி வறியவர்க்குக் கொடாது தாமே தனித்து உண்ணுதல் பிச்சை எடுத்தலினும் துன்பந் தருவது.

**கொடுக்க முடியாமலிருத்தலினும் சாதல் இனிது**

**34. சாதலின் இன்னாத தில்லை; இனிதாதூஉம்**
**ஈதல் இயையாக் கடை.**

(வ - ரு): சாதலின் இன்னாதது இல்லை; சதல் இயையாக் கடை இனிது.

அதூஉம்

இன்னாதது - துன்பந்தருவது.
இயலாத விடத்து.

இயையாக்கடை

சாதலைப்போலத் துன்பந தருவது வேறொன்றும் இல்லை; கொடுக்க இயலாதபோது அச்சாதல் தானும் இனிதாகும்.

## புகழ்பட வாழாதார் பிறர் இகழின் தம்மைத் தாமே நோக

35. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை இகழ்வாரை நோவ தெவன்.

(வ - ந.). புகழ்பட வாழாதார் தம் நோவார் தம்மை இகழ்வாரை நோவது எவன்?

நோவார் - நோகாது. எவன் - யாது கருதி.

புகழ் உண்டாகும்படி வாழமாட்டாதவர் (பிறர் தமமை இகழ்வதைக் கேட்டுத்) தமமையே நொநது கொள்ளாது, ஏனை?

இகழ்கின்றவரை நோகச் செய்வது

## அருளுடையார்க்கு அல்லல் இல்லை

36. அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும் மல்லன்மா ஞாலங் கரி.

(வ - ந.): அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை; வளி வழங்கும் மல்லல் மாஞாலம் கரி.

. . . . . .

அருள ஆளவார் - அருளுடையார்; அலலல - துன பம். வளி - காற்று. வழங்குதல் - இயங்குதல். மல்லல் - செழிப்பு. மா - பெரிய. ஞாலம் - உலகம். கரி - சான்று.

அருளுடையவர்களுக்குத் துன்பம் இல்லை; காற்று இயங்குகின்ற செழிப்புடைய பெரிய உலகில் வாழ்வாரே இதற்குச் சாட்சியாவார்.

## வறுமைக்குக் காரணம் தவமின்மை 37.

இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்

(வ - ந.): இலர் பலர் ஆகிய காரணம், நோற்பார் சிலர், நோலாதார் பலர்.

இலர் - வறியர். நோற்றல் - தவஞ் செய்தல்.

உலகத்தில் தவஞ்செய்வார் சிலரும் தவஞ் செய்யா தார பலரும இருப்பதே வறியர் பலராயிருத்தற்குக் காரணம்.

மனத்துறவின்றி வெளித்துறவு பூண்டாரிற் கொடியரில்லை

38. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணர்(ர்) இல்.

(வ - ந.): துறந்தார்போல் வஞ்சித்து நெஞ்சில் துற வார் வாழ்வாரின் வண்கணர்(ர்) இல்.

துறத்தல் - பற்று அறுதல் வஞ்சித்து - கபடம் செய்து. வன்கணர் - கொடியவர்

மனத்தில் பற்றை விடாதவராய் பற்று விட்டவர் களைப் போலக் கபடஞ் செய்து வாழ்கின்றவரிலும் கொடியவர் யாரும் இல்லை



39. பொய்யாதார் உயர்ந்தோர் மனத்தில் உளர் உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்.

(வ - ந.): உள்ளத்தால் பொய்யா
தொழுகின் உலகத்தார் உள்ளதுள் எல்லாம்
உளன்.

பொய்யாது - பொய் கூறுது. உள்ளம் -
மனம்.

மனம் அறியப் பொய் பேசாது நடப்பவன்
உயர்ந் தோர் மனத்தில் நிலைத்திருப்பான்.

**மெய்பேசுதல் தான தவங்களில் சிறந்தது 40**

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரின் தலை.

(வ - ந): மனத்தொடு வாய்மை
மொழியின் தவத் தொடு தானம செய்வாரின்
தலை.

மொழிதல் - சொல்லுதல். தலை -
சிறப்புடையவன்.

ஒருவன் மனமார மெய்
தவத்தோடு தருமத்தையும
சொல்வானையின் அவன்
செய்வாரினும் சிறந்தவ
னுவான்.

**மெய் பேசுவதற்கு ஒப்பான செயல் இல்லை 41.**

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை
எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

(வ - ந.): யாம் மெய் ஆ(க) கண்டவற்றுள் எனைத்து ஒன்றும் வாய்மையின நல்ல பிற இல்லை.

எனைத்து - எவ்வகையான.

யாம மெய்யெனக்கணட பலவற்றுள் மெய் பேசுவ தற்கு எவ்வகையிலாவது ஒப்பான நல்ல வேறு செயல்கள் இல்லை.

**சினம் சுற்றத்தாரையும் சுடும்**

**42.** சினமென்னும் சேர்ந்தாரைக்கொல்லி
இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.



(வ - ந.): சினமென்னும் சேர்ந்தாரைக்கொல்லி இனமென்னும் ஏமப்புணையைச் சுடும்.

சேர்ந்தாரைக் கொல்லி - நெருப்பு. ஏமப்புணை - காப்பதாகிய தூணை.

கோபம் என்னும் நெருப்பு, ஒருவனுக்குப் காவலாயுள்ள சுற்றத்தினரையும் சுடும்.
பாது

## கொடிய துன்பஞ் செயினும் தினவாமை நன்று

**43.** இணர்எரி தோய்வன்ன இன்னு செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

(வ - ந.): இணர் எரி தோய்வு அன்ன இன்னு செயினும் வெகுளாமை புணரின் நன்று.

இணர் - கொத்து. இணர் எரி - பல சுடர் உடைய நெருப்பு. தோய்தல் - மேற்படிதல். புணரின் - இசையுமாஞல், முடியுமாஞல்.

பல சுடர் உடைய நெருப்பில் தோய்ந்தாற்போன்ற துன்பங்களை இழைத்த ஒருவன் நட்புக் கொள்வானுயின் அவனிடம் கோபங்கொளளாதிருத்தல் நல்லது.

## தன்னுயிரைப்போலவே பிறன் உயிரையும் நினை

**44.** தன்னுயிர்க்கு இன்னுமை தானறிவான்
என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னு செயல்.

(வ - ந.): தன் உயிர்க்கு இன்னுமை தான் அறிவான் மன் உயிர்க்கு இன்னுமை செயல் என் கொல்லோ.

இன்னு - துன்பந்தருவன மன் -

நிலைபேறு. என் கொல்ஓ - என்ன காரணத்தால்.

பிறர் செய்யும் தீங்கால் தன் உயிர்க்குத் தோன்றும் துன்பத்தைத தானே அறிகின்றவன் பிற உயிர்களுக்குத் துன்பம தருவனவற்றை ஏன் செய்யவேண்டும?

**சான்றோர் செல்வம் பெறினும் பிறர்க்குத் தீமை செய்யார் 45. சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு**

**செய்யாமை மாசற்றார் கோள்.**



(வ - ந.): சிறப்பு ஈனும செல்வம் பெறினும் மாசற் றார் கோள் பிறர்க்கு இன்னு செய்யாமை.

இன்னு - துயர். மாசற்றார் - மனத்தூய்மையுடை யார்.

சிறப்பை யளிக்கின்ற செல்வங்களை பிறர்க்குத் துன்பம செய்து பெறலாமாயினும், மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருப்பது மனத்தூய்மை உடை யோர் கொள்கை.

**செல்வம் நிலையாதாகையால் உடனே அறஞ்செய்க**

**46.** அற்கா இயலபிறறுச் செல்வம்; அதுபெறறூல்
அற்குப ஆங்கே செயல்.

(வ - ந.): செல்வம் அல்சா இயல் பிற்து;
அது பெற் ரூல் அற்குட ஆங்கே செயல்

அல்சா - நிலைக்காத அற்குட - நிலைபெறுவது (தரு
மம்) செய்க. ஆங்கே - அப்பொழுதே செயல் - செய்க.

செல்வம் நிலையில்லாதது; அது
கிடைத்ததால் தரு மத்தை உடனே செய்க.

இறப்பும் பிறப்பும் தூக்கத்தையும் விழிப்பையும்
போன்றன **47.** உறங்குவது போலும் சாக்காடு;
உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

(வ - ந.): சாக்காடு உறங்குவது போலும்;
உறங்கி விழிப்பது போலும்
பிறபபு

சாக்காடு - இறப்பு, மரணம். உறங்குவது -
நித்திரை கொள்வது.

மரணம் நித்திரை கொள்வது போன்றது;
பிறப்பு நித்திரை கொண்டபின் விழிபபது
போன்றது.

பற்றறுத்தவனுக்குக் கவலை இல்லை

**48.** யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.



(வ - ந.): யாதனின் யாதனின் நீங்கியான், அதனின் அதனின் நோதல் இலன்.

நீங்கியவன் - துறந்தவன்.

ஒருவன் றுத்தாலே, எந்த எந்தப் பொருளினிடத்துப் பற் அவனுக்கு அந்த அந்தப் பொருளால் துன்பமுண்டாவதில்லை.

பற்று ஒழியவேண்டுமானால் கடவுளிடத்தில் பற்றுவை

**49.** பற்றுக பற்றற்றான் பற்றினை
அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

(வ - ந.): பற்று அற்றான் பற்றினை பற்றுக; பற்று விடற்கு அப்பற்றைப் பற்றுக.

பற்று அற்றான் - பற்றில்லாத கடவுள். பற்றினை - முத்தி நெறியை. அப்பற்றை - அவ்விருப்பை. பற்றுக - செய்க.

எல்லாப் பற்றுக்களையும் விட்ட கடவுளைப் பற்றினில்; எலலாப் பற்றும விடுதற்கு நீ அவரை உறுதியாகப் பிடி.

**செங்கோல் மன்னன் கடவுளைப் போன்றவன்**

**50.** முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப் படும்.

(வ - ந): முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும.

முறைசெய்தல் - நீதியை நடத்தல். காப்பாற்றல் - காத்தலைச் செய்தல். மன்னவன் - அரசன். இறை - கடவுள். வைத்தல் - சிறப்பித்து மதித்தல்.

நீதி நடத்திக் குடிகளைக்
மக்களால் கடவுள் என்று
காப்பாற்றும அரசன்
சிறப்பாக மதிக்கப்படு

வான்

உலகு இன்புறக்கண்டு கற்றறிந்தார் இன்புறுவர்

51. தாம்இன் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.



இன்புறுவது - இன்பந்தருவதாகிய கல்வி.
உலகு - உலகத்தவர். காமுறுதல் - விரும்புதல்.

தமக்கு இன்பம் தருகின்ற கல்வியைத் தம் வாயி லாகப் பிறர் கேட்டு இன்பமடைதலைக் கண்டு கற்றவர் இன்பம் அடைவர்.

சபையில் பேசாராயின் கல்லாதாரும் நல்லர் 52.
கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா(து) இருக்கப் பெறின்.

(வ - ஈ.): கற்றார் முன் சொல்லாது இருக்கப்பெறின் கல்லாதவரும் நனிநல்லர்.

நனி - மிக.

படித்தவர் சபைமுன் பேசாது இருந்தால்

படியாதவரும் மிக நல்லவராகக் கொள்ளப்படுவர்.

## உணவைப்போலக் கேள்வியும் இன்றியமையாதது

53. செவிக்கு உணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்.

(வ - ந): செவிக்கு உணவு இல்லாத போழ்தை வயிற்றுக்கும் சிறிது ஈயபபடும்.

செவிக்கு உணவு - கேள்வி ஈதல் - இடுதல்.

காதுகளுக்கு அறிவுரைகளாகிய கேள்வி இல்லாத விடத்து வயிற்றுக்கும் சிறிது உணவு இடப்படும்.

(ஒருவன கல்வி கேள்விகளில் ஈடுபட்டிருக்கும்போது உணவைப் பற்றி நினைக்கலாகாது.)

## கேள்வியே தளர்வில் ஊன்று கோலாவது

54. கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு ஒற்கத்தின் ஊற்றுந் துணை.

(வ - ந.): கற்றிலன் ஆயினும கேட்கவற்கு ஒற்கத்தின் துணை ஊறறுமம.

அஃதொரு

ஒற்கம் - தளர்ச்சி. ஊற்று - ஆதாரம்.

கல்வி கற்றிராவிட்டாலும் ஒருவன் பிறர் சொல்லும் நல்ல உரைகளைக் கேட்பானுகில் அது அவனுக்குத் தளர்ச்சி வந்த காலத்தில் பெரும் துணையாகும்.

## செவிச்சுவை சிறந்தது

**55** செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

(வ - ரை): செவியிற் சுவையுணரா மாக்கள் அவியினும வாழினும என்.
வாயுணர்வின்

செவியிற் சுவை - கேட்பதாலுண்டாகும சுவை. உணரா - அறியமாட்டாத. வாயுணாவு - வாயிலால் உண்ணப்படும உணவின் சுவை. அவிதல் - இறத்தல்.

செவியிலால் நுகரப்படும் சுவையுணர்வை அறியாது வாயிலாலுண்ணப்படும உணவின சுவையை அறியும மக்கள் இருந்தென்ன மடிந்தென்ன ?

## அறிவே அரணும் ஆயுதமுமாகும்

**56.** அறிவுஅற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்

உள் அழிக்கல் ஆகா அரண்.

(வ - ந.): அறிவு அற்றம் காக்கும் கருவி; செறு வார்க்கு அழிக்கல் ஆகா உள் அரண்.

அற்றம் - கெடுதி. கருவி - ஆயுதம். செறுவார் - பகைவர். உள் அரண் - புகுந்து அழிக்கமுடியாத கோட்டை.

ஒருவனுக்குக் கெடுதிவராமல் காக்கும் ஆயுதமே அறிவு; அது பகைவரால் அழிக்கமுடியாத உள் கோட்டையுமாகும்.

எவர் மொழிகளிலிருந்தும் உண்மையைக் காண்க

57. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு



(வ - ந.): எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.

யார் யார் - எவர் எவர். மெய்ப்பொருள் - உண்மைப் பொருள்கள்.

எவருடைய மொழிகளிலிருந்தும் உண்மையைப் பிரித்து எடுத்துக்கொள்வது அறிவு ஆகும்.

## உலோபம் தீமைகளுள் கொடியது

**58** பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன்(று) அன்று.

(வ - ந): பற்றுள்ளம் என்னும் இவறன்மை றுள்ளம எண்ணப் படுவதொன்(று) அன்று.

எற்

பற்று உள்ளம் - மனப்பற்று. இவறன்மை - உலோபம். எற்றுள்ளும் - எல்லாவற்றுள்ளும்.

பொருளைக் கைவிடாமையாகிய உலோபதன்மை மற்றைய தீமைகளோடுவைத்து எண்ணப்படுவதன்று. அது சாதாரண தீமைகளைக் காட்டிலும கொடியது

## சேர்க்கை நன்மை பயக்கும்

**59** மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும
இனந்தூய்மை தூவா வரும்.

(வ - ந.): மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும இனந்தூய்மை தூவா வரும்.

தூய்மை - சுத்தம். செய்வினை - செய்யும் தொழில். இனம் - சேர்ந்திருப்போர் தூவா - சார்பாக.

மனச்சுத்தமும் செய்கைகளின் சுத்தமும் சேர்க்கையினால் உண்டாகும்.

நண்பரின்

## நண்பரே சிறந்த பாதுகாவல்

**60. மனநல நன்குடையர் ஆயினும் சான்றோர்க்(கு) இனநலம் ஏமாப் புடைத்து.**



[ஐந்தாம்

(வ - ந.): மன்னநல(ம்) நன்குடையர் ஆயினும் சான் றோர்க்(கு) இனநலம் ஏமாப் புடைத்து.

சான்றோர் - அறிவுடையோர்க்கு. இனநலம் - சேர்ந் திருப்போரின் நற்குணம். ஏமாப்பு - பாதுகாக்கும்

வலிமை.

மனநலம் எல்லாம் உடையர் ஆயினும், அறிவுடையோர் தம்மைச் சார்ந்திருக்கும் நண்பரையே தம்மைப் பாதுகாக்கும் வலிமையாகக் கொள்வர்.

## செய்வன அறிந்து செய்க

**61. செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க செய்யாமை யானும் கெடும்.**

(வ - ந): செய்தக்க அல்ல தக்க செய்யாமை யானும் கெடும்.

செயக்கெடுமெ; செய்

செய்தக்க - செய்யத்தக்கவை. அல்ல - அல்லாதன.

செய்யத்தக்கன அல்லாதனைச் செய்தால் கேடு உண்டாகும்; செய்யத்தக்கவற்றைச் செய்யாமையாலும் கேடு உண்டாகும்.

## வலியிலார் பலர்முன் வலியுடையான் எதிர் நிற்பதரிது

**62. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்**

சால மிகுத்துப் பெயின்.

(வ - ந.): பீலிபெய் சாகாடும அச்சுஇறும் அபபண்டம சால மிகுததுபபெயின (அசசிறும்.)

பீலி - மயில் தோகை பெய்தல் - ஏற்றுதல். சாகாடு- வண்டி. அசசு இறும் - அச்சு ஒடியும். சால - மிக அதிகம்.

மபிலிறகு ஏற்றும் வண்டியும், அப்பண்டம் மிக அதி கம் ஏற்றப்பட்டால் அச்சு முறியும்.



**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை கெடும் 63.**

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றுக் கெடும்.**

(வ - ம்.): அளவறிந்து வாழாதான் உளபோல இல்லாகி தோன்று கெடும்.

வாழ்க்கை

அளவறிந்து - இருக்கும் பொருளின் அறிந்து. தோன்று - தோற்றமும் இல்லையாகி.

அளவை

இருக்கும் பொருளின் அளவை அறிந்து வாழாத வனின் வாழ்க்கை செழிப்புற்றதுபோலத் தோன்றி சுவடில்லாது அழிந்துபோம்.

**காலமறிந்து செய்யின் காரியம் கைகூடும்**

**64. ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தால் செயின்.**

(வ - ர): காலம் கருதி இடத்தால் செயின் ஞாலம் கருதினும் கைகூடும்.

ஞாலம் - உலகம். கருதினும் - ஆள எண்ணினாலும். கைகூடும் - அனுகூலமுண்டாகும காலம் - ஏற்ற காலம். கருதி - அறிந்து.

தக்ககாலத்தை அறிந்து இடத்தோடு பொருந்தச் செய்தால், உலகம் முழுவதையும் ஆள எண்ணினாலும், அனுகூலமுண்டாகும்

**ஒவ்வாத இடத்து ஒன்றும் நடக்காது 65. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்**

நாவாயும் ஓடா நிலத்து.

(வ - ஈ.) கால்வல் நெடும் தேர் கடல் ஓடா; கடல் ஓடும் நாவாய் நிலத்து ஓடா.

கால் - சக்கரம். வல் - வலிய. நாவாய் - தோணி.

வலிய சக்கரமுடைய உயர்ந்த தேர் கடலில் ஓட மாட்டாது. கடலில் ஓடும் தோணி நிலத்தில் ஓடாது.



## அறிவுபற்றி அமைச்சனைத் தெரிக

**66. காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்**
**பேதைமை யெல்லாந் தரும்.**

(வ - ஈ.): காதன்மை கந்தா அறி வறியார்த் தேறு தல் பேதைமை யெல்லாந் தரும.

காதன்மை - அன்புடைமை. கந்து - காரணம். அறிவு அறியார் - அறியவேண்டியவற்றை அறியாதவர். தேறு தல் - தெளிதல் பேதைமை - அறியாமை.

அறிவில்லாதவனை அவனிடத்துள்ள அன்பு காரண மாகப் புத்தி கூறுவோனாக அமர்த்தினால், அவன் மூடத் தனமான செயல்களில் புகுத்திவிடுவான்.

## நம்பிக்கையும் சந்தேகமும் ஆராய்ந்துகொள்க

**67. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**

தீரா இடும்பை தரும்.

(வ - ந.): தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்.

தேருதல் - ஆராய்தல். ஐயுறவு - சந்தேகப்படுதல். தீரா - நீங்காத. இடும்பை - துன்பத்தை.

ஆராயப்படாதவனை நம்புதலும், தகுதியுடையவனென்று அறியப்பட்டவனைச் சந்தேகித்தலும் முடிவில்லாத துன்பம் தரும்.

## ஏற்றவனை ஏற்றகாலத்தில் வேலையிடு 68.

செயவானை நாடி வினைநாடிக் காலத்தோ(டு)
எயத உணர்ந்து செயல்.

(வ ந.): செய்வானை நாடி வினைநாடிக் தோ(டு) எய்த உணர்ந்து செயல்

காலத்

செய்வானை - செய்கின்றவனது தன்மைகளை.

நாடி -

ஆராய்ந்து. வினை - செய்யப்படுவது. எய்த - பொருந்த. உணர்ந்து - அறிந்து.

வேலையைச் செய்பவனைத் தெரிந்தெடுத்து அவனுக்குத் தகுதியான வேலையைக் கொடுத்து, அவன் அதனை ஏறறகாலத்தே செய்யும்படி விடு.

மக்கள் அரசன் செங்கோலினுல் வாழ்வர்

69. வானேக்கி வாழு முலகெல்லாம்; மன்னவன்
கோனேக்கி வாழும் குடி.

(வ - ந.): உலகு எல்லாம் வான்நோக்கி குடி மன்னவன் கோல்நோக்கி வாழும்.

வாழும் ;

உலகு - உலகில் வாழும் உயிர். வான்நோக்கி - மழை பெய்யின். கோல் - செவ்விய ஆளுகை, செங்கோல்

உலகில் வாழும் உயிர்கள் தாம் வாழ்வதற்கு மழையை எதிர்பார்க்கும்; அதுபோல மக்கள் தமது பாதுகாப்புக்கு அரசனின் செங்கோலை நாடுவர்.

பார்காக்கும் வேந்தனை செங்கோல் காக்கும் 70.
இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

(வ - ந.): வையகம் எல்லாம் இறைகாக்கும்; அவனை முறைகாக்கும் முட்டா செயின்.

வையகம் - உலகம். இறை - அரசன்.
தன்னை. முறைகாக்கும் - செங்கோல் காக்கும்.

அவனை -
முட்டா-
தவறாது.

அரசனே மக்கள் எல்லோரையும் காப்பான்; அவன் ஆட்சி தவறுதல் இல்லையாயின் அவனை அவன் செங்கோல் காககும.

**குடிகளிடம் பொருள் கேட்கும் அரசன்**

**கொள்ளைக்காரன் 71. வேலொடு நின்றான் இடுவென்**
**றதுபோலும்**

**கோலொடு நின்றான் இரவு.**

(வ - ந.): கோலொடு நின்றான் இரவு வேலொடு நின்றான் இடு என்றதுபோலும்.



வேல் - வேலென்னும் ஆயுதம். இடு - தா. கோல் - செங்கோல். இரவு - பொருள் கேட்டல்.

செங்கோல் வைத்திருக்கும் அரசன் குடிகளிடத்தில் பொருள் கேட்டல் வேலைக் கையில்வைத்து நிற்கும் கொள்ளைக்காரன் 'தா' என்று பொருளைக் கேட்பது

போன்றது.

## வெகுவாக மிரட்டி தண்டனையைக் குறைக்க

72. கடி(து)ஒச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

(வ - ந.): கடிது ஒச்சி மெல்ல எறிக ஆக்கம் நெடிது வேண்டுபவர்.

கடிது ஒச்சி - மிகுதியாகச் செய்வதுபோல் காட்டி. எறிக - செயக. ஆக்கம் - அதிகாரம். வேண்டுபவர் - நிலைத்தல விரும்புபவர்கள்.

தமது அதிகாரம் நிலைக்கவேண்டு மென்று விரும்பு பவர்கள் குற்றத்துக்குச் செய்யும் தண்டனையை அதிகம் அளிப்பார்போல் காட்டிச் செய்யுமிடத்து அளவு கடவா மல் செய்தல் வேண்டும்.

## கெடாது பிறர் சொல்வழி நிற்பது நலம் தரும் 73.

கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்(கு)
உரிமை உடைத்திவ் வுலகு.

(வ - ஈ.): கருமம் சிதையாமல்
லார்க்(கு) உரிமை உடைத்து இவ்வுலகு.

கண்ணேணுடவல்

கருமம் - தொழில். சிதைத்தல் - கெடுத்தல்.
ணேட்டம் - முகம் முறியாமை.

கண்
தாம்
சொல்வழி

செய்யும் தொழில் கெடாமல் பழகியவர்கள்
நிற்கவல்லவர்க்கு இவ்வுலகு உடையதாகும்.



## ஒற்றரின் கடமை

**74. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா
ரென்றாங்(கு)
அனைவரையு மாராய்வ தொற்று.**

(வ - ஈ): வினைசெய்வார் தஞ்சுற்றம்
வேண்டாதா ரென்று ஆங்கு அனைவரையும்

ஆராய்வது ஒற்று.

வினை - கருமம். சுற்றத்தார் - உறவினர். வேண்டாதார் - பகைவர். ஒற்று - ஒற்றனுவான்.

அரசுவேலை செய்கின்றவர்களையும், அவரது உறவினரையும், பகைவரையும் ஆராய்கின்றவனே அதுவே அவனது தொழில்.

ஒற்றனுவான்.

செல்வம் இழப்பினும் ஊக்கமுடையார் வருந்தார்

75. ஆக்கம் இழந்தேமென்(று) அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தங் கைத்துடை யார்.

(வ - ந.): ஒருவந்தம் ஊக்கம் கைத்து உடையார் ஆக்கம் இழந்தேம் என்று அல் ஆவார்.

ஆக்கம் - செல்வம். அல்ஆவார் - வருந்தமாட்டார். ஒருவந்தம் - நிலையான. கைத்து - கைப்பொருள்.

நிலையான
இழந்தவிடத்து
ஊக்கத்தை உடையார் கைப்பொருளை
அதனை இழந்தோமென்று வருந்தியிரார்.

அதிட்டமில்லாமை இழிவன்று; செய்வன செய்யாமை இகழ்வு 76. பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து

ஆள்வினை இன்மை பழி.

பொறியின்மை - அதிட்டமில்லாமை.
முயற்சி.

ஆள்வினை -

அதிட்டமின்மை யார்க்கும் இழிவன்று; அறிய வேண்டியவற்றை அறிந்து முயற்சி செய்யாமையே பழிக்கத்தக்க செயல்.



வருந்தி உழைப்பார் துன்பத்துக்கு அஞ்சார் 77. இடும்பைக்(கு) இடும்பை படுப்பர் இடும்பைக்(கு) இடும்பை படாஅ தவர்.

(வ - ஈ.): இடும்பைக்கு இடுமபை படாதவர் இடும்பைக்கு இடும்பை படுப்பர்.

இடும்பை - துன்பம். இடும்பை படாதவர் - துன்பப் படமாட்டார். படுத்தல் - விளைத்தல்.

துன்பத்துக்கு வருந்தமாட்டாதவர்கள், அத்துன்
பத்துக்குத் துன்பம் விளைப்பர். அதாவது, துன்பத்தைக் கண்டு அஞ்சாதவர்கள் அத்துன்பத்தை வருத்தம் தரும் முயற்சிகளால் போக்குவர்.

துன்பம் இயல்பு என அறிவான் துன்பமுறுன்

78. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

(வ - ஈ.): இன்பம் விழையான் இடும்பை இயல் பென்பான் துன்பம உறுதல் இலன்.

விழைதல் - விரும்பல். இடும்பை - துன்பம். இயல்பு - பொது விதி.

உடம்பிற்கு இன்பமானவற்றை விரும்பாது, செயல் களில் துன்பம் உண்டாதல் இயற்கைவிதி என அறிந் திருப்பவன் ஒருபோதும் துன்பம் அடையான்.

பேச்சிலும் ஆக்கமும் கேடும் வரும்

**79.** ஆக்கமும் கேடும் அதனல் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.

(வ - ந.): ஆக்கமும் கேடும் அதனல் வருதலால் ; சொல்லின்கண் சோர்வு காத்து ஓம்பல்.

ஆக்கம் - வாழ்வு கேடு - தாழ்வு. சோர்வு - தளர்வு. ஓம்புதல் - கவனித்துக் காத்தல்.

வாழ்வும் தாழ்வும் பேச்சினுல்
உண்டாவதால் பேச் சில் தளர்வுபடாமல்
கவனித்துப் பேசுதல் நன்று. பாகம்]



பாவிகளுடைய செல்வத்தினும் நல்லவர் வறுமை நன்று **80.** பழிமலந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

(வ - ந.): பழி மலிந்து எய்திய
ஆக்கத்திற் சான்
றோர் கழிநல் குரவே தலை

மலிந்து - சுமந்து கழி - மிக நல்குரவு - வறுமை. தலை - மேல்

பாவம செய்து பெற்ற செல்வததினும நல்லவர் களின் மிக்க வறுமை மேல்.

**இன்பந்தரும் தொழிலை உடல் வருத்தம் நோக்காது செய்க 81. துன்பம உறவரினுஞ் செய்க துணிவாறறி**

**இன்பம பயககும வினை.**

(வ - ந): இனபம பயக்கும வினை துன்பம உறவரினும் துணிவு ஆற்றி செயக

உற - மிக. பயத்தல் - தருதல. துணிவு - தவர் வின்மை. ஆற்றி - மிகுதது.

இன்பந்தருகின்றதாகிய முயற்சியை, அது உடல வருததததை மிக்க தருவதாயினும அதை பொருட்படுத தாது மிகத் துணிவோடு செய்க.

**மன உறுதியிலார் மதிக்கப்படார்**

**82. எனைத்திட்பம் எயதியக் கண்ணும வினைத்திட்பம**

**வேண்டாரை வேண்டாது உலகு.**

(வ - ந.): வினை திட்பம் வேண்டாரை, எனை திட்பம எய்திய கண்ணும உலகு வேண்டாது.

திட்பம் - உறுதி வேண்டார் - கொளளார். வேண - டாது - மதியாது

செய்கைகளில் உறுதிபபாடு
இலாதவரை, அவரி
டத்து வேறு " றுதிபபாடுகள்
போதுமை உலகதவா மதியா.

(பெருமைகள்) இருபத





போற்செய்வார் பலர்; தூல்கற்பார் சிலர் 83
பகையகத்துச் சாவா எளியர் அரியர்
அவையகத்(து) அஞ்சா தவர்.

(வ - ந.): பகையகத்து சாவார் எளியர்; அவை அகத்து அஞ்சாதவர் அரியர்.

எளியர் - பலர். அரியர் - சிலர்.

போர்க்களத்தில் (வீராய்ச்) சாவர் பலர்; சபையில் ஏறிப்பேச நடுங்காதவர் சிலர்.

நாட்டிற்கு அழகாவன ஐந்து

84. பிணியின்மை செல்வம் விளைவின்பம் யமம்
அணியென்ப நாட்டிற்கிவ் ஐந்து.

(வ - உ.): பிணி இன்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம் இவ்வைந்து நாட்டிற்கு அணி என்ப.

பிணி - நோய்

மக்களின் மகிழ்வு.

விளைவு - நிலச்செழிப்பு இன்பம் -

ஏமம் - காவல், படை எடுப்புக்களி

லிருந்து காத்தல் அணி - அழகு.

நோயின்மை, செல்வம் நிலச்செழிப்பு, மக்களின் மகிழ்ச்சி, படை எடுப்பினின்றும் காவல் முதலிய ஐந்தும் நாட்டிற்கு அழகாகும்.

## பேராண்மையே வீரனுக்கு உயிர்

**85. பேராண்மை என்ப தறுகண் ஒன்று உற்றக்கால்**

**ஊராண்மை மற்றதன் எஃகு.**

(வ - உ.): தறுகண் பேர் ஆண்மை என்ப, உற்றக்கால் ஊர் ஆணமை அதன் எஃகு.

ஒன்று

தறுகண் - வீரம். அவர்க்கு - பகைவர்க்கு. உற்றக் கால் - தாழ்வு வருதால் ஊராண்மை - உதவி. எஃகு - உயிர் நிலை.

குறை நேர்ந்தவிடத்து அவனுக்கு உதவி பேராண்மையின் உயிராகும்.

செய்வதும்

**தலைவன் நினைத்து வருந்தும்படி போரில் உயிர் விடுதல்**

மேல் 86. புரந்தார்கண் நீர்மல்கச் சாகற்பின் சாக்கா(டு)

இரந்துகோள் தக்க(து) உடைத்து.

(வ - ந): புரந்தார்கண் நீர்மல்கச் சாகற்பின் சாக் காடு தக்கது உடைத்து இரந்துகோள்

புரந்தார் - ஆண்டார். மல்குதல் - வழிதல். சாக் காடு - சாவு இரந்து - யாசித்து. கோள் - வாங்குதல். தக்கது - தகுதியுடையது.

தன்னைக் காத்த தலைவன் தன் கண்களினின்று கண் னீர் வடியும்படி

வருத்தப்பட ஒருவன் போரில் மடியக்
கூடுமாயின், பிச்சையெடுத்தாயினும் அவ்வகை
மரணத்தைக் கோருதல் நல்லது

**மன ஒற்றுமையால் நட்பு பலப்படும் 87.**

புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

(வ - ந.): புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சி தான் நட்பாம் கிழமை தரும.

புணர்சசி - சிநேகம. பழகுதல் - அடிக்கடி கண்டு நட்புக் கொண்டாடுதல். கிழமை - உரிமை.

சிநேகமும் அடிக்கடி கண்டு பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை; மன உணர்ச்சி (மன ஒற்றுமை) நட்பாகிய உரிமையைத தரும். (மனம் ஒன்றுபட்டால் நட்புப் பலம் அடையும்.)

**நல்லோர் நட்பைத் தேடிக் கொள்க 88.**

அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்(பு) ஆய்ந்து கொளல்.

(வ - ந.): அல்லது அழசசொல்லி இடிதது வழக்கு அறிய வல்லார் ஆயந்து நட்பு கொளல்

அல்லது - உலக நடைக்கு மாறுனது. அழ - துக்கப் படும்படி. இடித்து - கண்டித்து. வழக்கு அறிய வல்லார் - உலக வழகுகின்படி நடத்த வல்லவரை ஆய்ந்து - தேடி. கொளல - கொள்ளுக.

உலக வழக்குக்கு மாறுனவற்றைச் செய்யக் னல் அழும்படியாகச சொல்லிக் கண்டித்தும், கருதி
உலக

வழக்கை அறிந்து நடக்கும்படி செய் விக்குமவல்லவரைத தேடி நட்புக கொள்க.

**வில் வணைத்தலும் பகைவர் சொல் வணக்கமும் ஒன்றே**

**89.** சொல்வணக்கம ஒன்னார்கண் கொள்ளறக; வில்வணக்கம்

**தீங்கு குறிததமை யான.**

(வ - ந.): வில் வணை க்கம தீங்கு குறித்தமையான் ஒன்னா கண் சொல் வணக்கம கொளளற்க.

வில் வணக்கம - வில்லை வளைத்தல். தீங்கு - தீமை.

குறித்தல் - செய்யக் கருதுதல் ஒன்னார்
கொள்ளற்க - கொளளாதொழிக.
- பகைவர்.

வில வஃளதுதல் தீமை செய்யக் கருதியே;
பகைவரது சொல் வணகுகமுடம் அவ்வாறே

## புல்லறிவாளன் நோய் போல்வான்

**90.** ஏவவும் செய்கலான்; தான்தேரான், அவ்வுயிர்
போலும அளவுமோர் நோய.

(வ - ந.): ஏவவுமை செய்கலான்; தான்தேரான்; அவ்வுயிர்போலும அவையும ஓர நோய்.

ஏவ - சொல்ல. செய்கலான் - செய்யான். தேறல் - அறிதல் உயிர் - அந்த உயிர

நல்ல புதநிமதிகளைச் சொன்னாலும்
புல்லறிவாளன் அதன்படி செய்யான்; தானை
ஒன்றையும அறியமாட்டாகம்]



டான்; அவன் உயிர் போகுமளவும்
மற்றவர்களுக்கு நோயாவான்.

(புல்லறிவாளன் - தன்னைப் பேரறிவினைக

நினைக் கும சிற்றறிவினன்.)

## உறவாடிக் கெடுக்கும் பகைவரை அஞ்சுக

**91.** வாள்போல் பகைவரை அஞ்சறக; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

(வ - ந.): வாள்போல் பகைவரை அஞசற்க; கேள் போல் பகைவர் தொடர்பு அஞ்சுக.

வாள்போல - வாளைப்போல வெட்டுவோமென்று நிற்பவர். கேள் - உறவு. தொடர்பு - நட்பு.

வெட்டுவேனென்று வெளிபபடையாக வரும் பகை வனை அஞ்சாதீர்கள ; நண்பர்போன்ற பகைவர் தொடர்பை அஞ்சுக

## பெரியார் கோபிக்கின் அரசாட்சியும் செல்வமும் அழியும்

**92.** வகைமாண்ட வாழ்க்கையும் வான் பொருளும் என்ஆம்

தகைமாண்ட தக்கார் செறின்.

(வ - ரு.): தகை மாண்ட தக்கார் செறின் மாண்ட வாழ்க்கையும் வான் பொருளும் என்னும் வகை

தகை - பெருமை. தக்கார் - பெரியோர். செறின் - கோபித்தால். வகை - பல அங்கங்கள் (பகுதிகள்). மாண்ட - சிறந்த வாழ்க்கை - அரசாட்சி. பெரிய என்படும் - என்ன ஆய்விடும்? வான் - (அழிந்து விடும்.)

பெருமையால் சிறந்த உயர்ந்தோர் கோபிக்கின் பல உறுப்புக்களை உடைய அரசாட்சியும் பெரிய பொருளும் அழிந்து விடும.



## இலக்குமி நீங்கப்பெற்றோர் செயல்

**93** இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்

திருநீக்கப் பட்டார் தொடர்பு.

(வ - ந.): இருமனப் பெண்டிரும் திருநீக்கப் பட்டார் தொடர்பு.

கள்ளும் கவறும்

இருமனப் பெண்டிர் - விலைமாதர்.
திரு - இலக்குமி.
கவறு - சூது.

அருளில்லாதவர் விலைமாதரும், ஆகியவற்றை மேற்கொள்வர்.

கள்ளும், சூதும

கள்ளுண்பது நஞ்சுண்பதே

94 துஞ்சினர் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

(வ - ந.): துஞ்சினோர் செத்தாரின் வேறு அல்லர்; கள் உண்பவர் எஞ்ஞானறும் நஞ்சு

உண்பார்.

துஞ்சுதல் - உறங்குதல். வேறல்லர் - வேறு எனப் படார். எஞ்ஞான்றும் - எப்பொழுதும்.

கள்ளுண்டு மயங்கி உறங்குவா
செத்தவரிலும் வேறுனவரல்லர்; எப்பொழுதும்
கள்ளை உண்பவர் நஞ்சை உண்டவராவார்

**செல்வம் வரின் பணிதலும், வறுமையில் பணியாமையும் வேண்டும் 95. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு.**

(வ - ந.): பெருக்கத்து பணிதல் வேண்டும்; சிறிய சுருக்கத்து உயாவு வேண்டுட.

பெருக்கம் - செல்வம். சிறிய சுருக்கத்து - குறைந்த வறுமை உண்டாயபோது. உயர்வு - பணியாமை.



செல்வம வந்தபோது பணிவு வேண்டும்; செல்வங் குறைந்து வறுமை உண்டானபோது தாழ்வு வராதபடி உயர்ந்த ஒழுக்கமுடையனுதல் வேண்டும்.

பெரியார் பிறர்குற்றம் கூறார்; சிறியார் அதனையே கூறுவர் **96**. அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

(வ - ந): பெருமை அற்றம் மறைக்கும்; சிறுமை தான் குற்றமே கூறிவிடும்

பெருமை - பெருமையுடையவர். அற்றம் - குற்றம். சிறுமை - சிறிய குணமுடையவர

பெருங்குண முடையவர் பிறர் குற்றத்தை மறைப்பர்; சிறிய குணமுடையார் அவர் குற்றதையே பிறர்க்குச் கூறிவிடுவார்கள்.

நல்லோர்க்கு நல்லவை எல்லாம் கடமைகளே **97**. கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

(வ - ந.): கடன் அறிந்து சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு நல்லவை எல்லாம கடன் என்ப.

கடன் - கடமை. சான்றாண்மை - நிறைந்த செயல். மேற்கொள்ளல் - செய்தல். நல்லவை - நன்மை என்று காணப்படுவன.

கடமையை அறிந்து பெருந்தன்மையை

மேற்கொள் பவர்களுக்கு நல்லன என்று காணப்படுவன எல்லாம் கடமைகளாகும்.

## நற்குணமில்லாதார் மரம்

**98.** அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர் மக்கட் பண்(பு)இல்லா தவர்.

(வ - ர.): மக்கள் பண்பு இல்லாதவர் அரம்போலும் கூர்மையர் ஏனும் மரம்போல்வர்.



மக்கள் பண்பு - மக்களுக்குரிய நல்ல குணம்.

மக்களுக்குரிய நல்ல குணங்கள் இல்லாதவர், அரம் போல் அறிவாலும் செயலாலும கூர் உடையராயினும் மரம் போன்றவர்களாவர்.

## ஆண்மை என்பது தன் குடும்பத்தை உயரச் செய்தல்

**99** நல்ஆண்மை என்ப(து) ஒருவற்குத் தான்பிறந்த

இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

(வ - ந.): ஒருவற்கு நல்ஆண்மை பிறந்த இல் ஆண்மை ஆக்கிக் கொளல்.

என்பது தான்

ஆண்மை - வீரம். இல்லாண்மை - குடியினையாளும் தன்மை.

ஒருவனுக்குச் சிறந்த வீரம் என்று சொல்வது, தான் பிறந்த குடும்பத்தை உயரச் செய்தல.

உழவன் உழாவிடின் உணவுமில்லை துறவுமில்லை

100. உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம் விட்டேம்என் பார்க்கு நிலை.

(வ - ந.): உழவினர் கை மடங்கின் விழைவதூஉம், விட்டேம் என்பார்க்கு நிலையும் இல்லை

கைமடங்கில் - செய்யாது கைகட்டிக்கொண்டு இருத்தல். விழைவது - விரும்பப்படும் உணவு.

உழவர் உழாது கையை மடக்கி இருப்பார்களானால் விரும்பப்படும் உணவும், துறந்தேம என்பார்க்குத் துறவு நிலையும் இல்லையாகும்.